4 தினமணி சென்னை

சனிக்கிழமை, 20 ஜூலை 2019

# குழந்தையின்மை பிரச்னை: 24-ல் இலவச பரிசோதனை முகாம்

சென்னை, ஜூலை 19: போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் குழந்தையின்மை பிரச்னைக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் வரும் புதன் கிழமை (ஜூலை 24) நடைபெறவுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் அன்றுகாலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும் இந்த முகாமில் குறிப்பிட்ட பரிசோதனைகள் இலவசமாகவும், சில பரிசோதனைகள் குறைந்த கட்டணத்திலும் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பரிசோதனைகளின் அடிப்படையில் மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு மருத்துவர்களின் ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளன. மருத்துவமனையின் செயற்கை கருத்தரிப்புத் துறை சார்பில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ராமச்சந்திரா மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்பதிவு மற்றும் கூடுதல் விவரங்களுக்கு 044 – 45928544, 6381791175 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.